# டிரஸ்ட் பேங்க் சிங்கப்பூர் லிமிடெட்
**(சிங்கப்பூரில் நிறுவனமாக நிறுவப்பட்டது)**

77 ராபின்சன் ரோடு #25-00 ராபின்சன் 77 சிங்கப்பூர் 068896

# 31 டிசம்பர் 2025 அன்று நிறைவடைந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள்

## நிதி நிலை அறிக்கை
## 31 டிசம்பர் 2025 நிலவரப்படி

| | **2025 $'000** | 2024 $'000 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கியில் உள்ள ரொக்கம் மற்றும் இருப்புகள் | **194,867** | 390,832 |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் குறுகியகாலக் கைமாற்றுகள் | **1,144,383** | 779,336 |
| சிங்கப்பூர் அரசாங்கக் கருவூலப் பத்திரங்கள் | **2,900,218** | 2,799,484 |
| உடனடி கைகொள் நிறுவனத்திடமிருந்து வரவேண்டிய தொகைகள் | **4,822** | 12,948 |
| தொடர்புடைய தரப்பிலிருந்து வரவேண்டிய தொகைகள் | **90** | - |
| பிறச் சொத்துகள் | **73,570** | 61,153 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துகள் | **3,574** | 6,097 |
| தொட்டுணர முடியாத சொத்துகள் | **88,874** | 84,858 |
| **மொத்தச் சொத்துகள்** | **4,410,398** | 4,134,708 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கி அல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புகள் | **3,957,500** | 3,798,770 |
| உடனடி கைகொள் நிறுவனம், தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் தாய்க் கைகொள் நிறுவனத்தின் கிளைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் | **102,895** | 9,174 |
| தொடர்புடைய தரப்புகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகள் | **6,253** | 6,704 |
| மற்றப்பொறுப்புகள் | **52,582** | 60,282 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **4,119,230** | 3,874,930 |
| **பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **720,000** | 695,000 |
| மற்றப் பங்குமுதல் பத்திரங்கள் | **60,000** | - |
| நியாயமான மதிப்புப் பாதுகாப்பு நிதிகள் | **(283)** | (203) |
| திரட்டப்பட்ட இழப்புகள் | **(488,549)** | (435,019) |
| **மொத்தப் பங்குமுதல்** | **291,168** | 259,778 |
| **மொத்தப் பங்குமுதல் மற்றும் பொறுப்புகள்** | **4,410,398** | 4,134,708 |
| **தற்செயல் சொத்துகள்** | | |
| எடுக்கப்படாத கடன் வசதிகள் | **8,005,116** | 7,448,558 |

## விரிவான வருவாய் அறிக்கைகள்
## 31 டிசம்பர் 2025 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கானவை

| | **2025 $'000** | 2024 $'000 |
|---|---|---|
| நிகர வட்டி வருவாய் | **103,853** | 72,853 |
| நிகரக் கட்டணம் மற்றும் தரகு வருவாய் | **29,586** | 19,613 |
| பிற வருவாய் | **2,341** | 4,395 |
| **இயக்கச் செலவுகளுக்கு முந்தைய வருவாய்** | **135,031** | 96,861 |
| ஊழியர்ச் செலவுகள் | **(48,423)** | (49,730) |
| குத்தகைக்கான நிதிச் செலவுகள் | **(127)** | (89) |
| இயக்க மற்றும் நிர்வாகச் செலவுகள் | **(97,148)** | (107,227) |
| **சேதத்திற்கு முன் மொத்த இயக்கச் செலவுகள்** | **(145,698)** | (157,046) |
| சேத இழப்பு | **(42,863)** | (33,214) |
| **வரிவிதிப்புக்கு முன் இழப்பு** | **(53,530)** | (93,399) |
| வருமான வரிச் செலவுகள் | **–** | – |
| **ஆண்டுக்கான இழப்பு** | **(53,530)** | (93,399) |

குறிப்புகள் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும் மற்றும் நிதி அறிக்கையினைப் பற்றிய முழுமையான புரிதலை நிதி அறிக்கைகளின் முழுமையான தொகுப்பைப் பார்க்காமல் எட்ட முடியாது. அது https://trustbank.sg/announcements/FS2025.pdf-இல் கிடைக்கிறது.

## மூலதனப் போதுமை விகிதங்கள்

MAS அறிவிப்பு 637ன் படி தீர்மானிக்கப்பட்ட வங்கியின் மூலதனப் போதுமை விகிதங்கள் மற்றும் மூலதனக் கூறுகள்:

| | **2025 %** | 2024 % |
|---|---|---|
| பொதுவான சமபங்கு அடுக்கு 1 மூலதனம் | **10.9%** | 16.7% |
| அடுக்கு 1 மூலதனம் | **15.5%** | 16.7% |
| மொத்த மூலதனம் | **16.6%** | 17.8% |

| | **2025 S$'மில்லியன்** | 2024 S$'மில்லியன் |
|---|---|---|
| பொதுவான சமபங்கு அடுக்கு 1 மூலதனம் | **142** | 175 |
| கூடுதல் அடுக்கு 1 மூலதனம் | **60** | - |
| அடுக்கு 1 மூலதனம் | **202** | 175 |
| அடுக்கு 2 மூலதனம் | **14** | 12 |
| மொத்த மூலதனம் | **216** | 187 |
| **இடர்-அளவிடப்பட்ட சொத்துகள்** | **1,305** | 1,050 |

## இயக்குநர்கள்

இந்த அறிக்கையின் தேதியில் அலுவலகத்தில் உள்ள இயக்குநர்கள் பின்வருமாறு:

ஜூடி இஹ்சு சுங் வெய்
பட்டிஜ்ஜன் எல்பார்ட் ஜேக்கோபஸ்
விபுல் சுரேன் சாவ்லா
பேட்ரிக் லீ ஃபூக் யாவ்
ஜாஸ்மின் வோங்
யோ ஊன் ஜின்
விக்டர் குவோ-லின் குவான் (6 அக்டோபர் 2025 அன்று நியமிக்கப்பட்டார்)

## டிரஸ்ட் பேங்க் சிங்கப்பூர் லிமிடெட் உறுப்பினர்களுக்கான சார்பற்ற தணிக்கையாளரின் அறிக்கை

### நிதி அறிக்கைகளின் தணிக்கை பற்றிய அறிக்கை

**கருத்து**

31 டிசம்பர் 2025 அன்றைய நிலவரப்படி உள்ள நிதி இடநிலை அறிக்கை, விரிவான வருவாய் அறிக்கை, சமபங்கு மாற்றங்கள் மற்றும் அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கான வங்கியின் பணப்புழக்க அறிக்கை, கணக்கியல் கொள்கை பற்றிய தகவல் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள், ஆகியவற்றை உள்ளடக்கிய டிரஸ்ட் பேங்க் சிங்கப்பூர் லிமிடெட்டின் ("வங்கி") நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம்.

எங்கள் கருத்தின்படி, நிறுவனச் சட்டத்தின் அத்தியாயம் 1967-ன் விதிகளின் (சட்டம்) படியும் மற்றும் சிங்கப்பூரில் நிதிநிலைகளை அறிக்கையிடுவதற்கு வேண்டிய தரங்களின் ("FRSகள்") படியும் இதனுடன் உள்ள நிதி அறிக்கைகள் சரியான முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. 31 டிசம்பர் 2025 அன்றைய நிலவரப்படி வங்கியின் நிதி நிலை பற்றியும், அன்று நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதியியல் செயல்திறன்கள், சமபங்கில் உள்ள மாற்றங்கள் மற்றும் வங்கியின் பணப்புழக்கங்கள் பற்றியும் உண்மையான, நியாயமான பார்வையைக் கொடுக்கும் வகையிலும் உள்ளன.

**கருத்துக்கான அடிப்படை**

சிங்கப்பூரின் தணிக்கைகளுக்கான தரநிலைகளின் ("SSAக்கள்") அடிப்படையில் நாங்கள் எங்கள் தணிக்கையை நடத்தினோம். அந்தத் தரங்களின் கீழ் எமக்குள்ள பொறுப்புகள் எம்முடைய அறிக்கையின் '*நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளர்களின் பொறுப்புகள்*' என்ற பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவனக் கட்டுப்பாட்டு ஆணையம் ("ACRA") வழங்கும் *நிபுணத்துவ நடத்தைக் குறியீடு மற்றும் பொதுக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள்* ("ACRA குறியீடு"), ஆகியவற்றின்படியும் சிங்கப்பூரில் பொதுவுரிமை நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும், குழுமத்துடன் தொடர்பில்லாத எச்சார்புமற்ற தணிக்கையாளர்கள் ஆவோம். இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம். நாங்கள் பெற்றுள்ள தணிக்கைச் சான்றுகள் எங்கள் கருத்துக்கான அடிப்படைக்குப் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்று நாங்கள் நம்புகிறோம்.

**மற்றத் தகவல்**

பிற தகவலுக்கு நிர்வாகம் பொறுப்பானது. மற்றத் தகவல்களில் பொதுவான தகவல்கள், இயக்குநர்களின் அறிக்கை மற்றும் துணைத் தகவல்கள் உள்ளன, ஆனால் நிதி அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவை அதில் இல்லை.

நிதி அறிக்கைகள் பற்றிய எங்களுடைய கருத்து, மற்றத் தகவல்களைச் சார்ந்தது அல்ல. அதன்மீது உத்தரவாதமிக்க முடிவு எதையும் நாங்கள் தெரிவிக்கவில்லை.

நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்வதில் எங்களின் பொறுப்பானது, மற்றத் தகவல்களை வாசிப்பது மற்றும் அப்படி வாசிக்கையில், நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் பெற்ற அறிவுடன் மற்றத் தகவலானது பொருண்மை கொண்ட வகையில் வேறுபடுகிறதா அல்லது வேறு விதத்தில் அளவு பொருண்மை கொண்ட வகையில் தோன்றுகிறதா என குறிப்பிடுதல் எங்கள் பணியினை அடிப்படையாகக் கொண்டு, இந்த மற்றத் தகவல்களில் பொருண்மை பிறழ்கூற்று இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், அந்த உண்மையை புகாரளிக்க வேண்டும். இவை தொடர்பாகத் தெரிவிக்க எங்களிடம் எதுவும் இல்லை

**நிதி அறிக்கைகளுக்கான நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்புகள்**

சட்ட விதிகளின்படியும், FRSகளின்படியும் உண்மையான, நியாயமான பார்வையைக் கொடுக்கும் வகையில் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பு நிர்வாகத்திற்கு உள்ளது. அதிகாரமற்ற பயன்பாடு அல்லது சீர்குலைப்பினால் இழப்பு ஏற்படாமல் சொத்துகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்ற ஒரு நியாயமான உத்தரவாத்தை அளிப்பதற்குப் போதுமான அகக் கணக்குக் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்கி பராமரிக்கும் பொறுப்பும் நிர்வாகத்திற்கு உள்ளது. உண்மையான நியாயமான நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அனுமதியை அளிக்கவும், சொத்துகளின் பொறுப்புடைமையைப் பராமரிக்கவும் பரிவர்த்தனைகள் உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படுவது அவசியம்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், தொடர்ந்து இயங்குவதற்கான வங்கியின் திறனை மதிப்பிடுவதற்கும், தொடர்ந்து இயங்குவது சார்ந்த பொருத்தமான விஷயங்களை வெளிப்படுத்துவதற்கும், தொடர்ந்து இயங்கும் திறனை மதிப்பிடுவது, நிறுவனத்தையோ அல்லது குழுமத்தையோ பணமாக்க எண்ணவில்லை அல்லது அவற்றின் செயல்பாட்டை நிறுத்தப்போவதில்லை அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர உண்மையான மாற்று வேறு இல்லை என்ற நிலைகள் இல்லாத போது தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் கணக்கியலைப் பயன்படுத்துவதற்கும் நிர்வாகமே பொறுப்பு.

வங்கியின் நிதி அறிக்கைச் செயல்முறையை மேற்பார்வையிடுவதும் இயக்குநர்களின் பொறுப்புகளில் அடங்கும்.

**நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்**

மோசடி அல்லது பிற ஒழுங்கற்ற அல்லது பிழை போன்றவற்றின் காரணமாக பொருண்மை கொண்ட பிறழ்கூற்று இல்லாத வகையில் முழுமையான அளவிலான நிதி அறிக்கைகள் உள்ளது என்ற நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவது மற்றும் எங்கள் கருத்துகளை உள்ளடக்கிய ஒரு தணிக்கையாளரின் அறிக்கையை வழங்குவது ஆகியவை எங்கள் குறிக்கோள்கள் ஆகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர்மட்ட உறுதிப்பாடு ஆகும், ஆனால் தணிக்கை தொடர்பான SSAக்களுக்கு ஏற்ப நடத்தப்படும் ஒரு தணிக்கை, இருக்கின்ற பொருட்படுத்தத்தக்க தவற்றை எப்போதும் கண்டுபிடிக்கும் என்று உத்தரவாதம் இல்லை. மோசடியினாலோ அல்லது பிழையினாலோ முரணான கூற்றுகள் வரலாம். தனியாகவோ அல்லது தொகுப்பாகவோ அவை, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் பயனர்களின் பொருளாதார முடிவுகளைப் பாதிக்கக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கப்பட்டால் அவை குற்றங்களாகக் கருதப்படும்.

SSAக்களின் படி தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நாங்கள் தொழில்முறை தீர்ப்புகளைக் கையாண்டோம், தொழில்முறை சந்தேகப் பார்வையைத் தொடர்ந்து கொண்டிருந்தோம். மேலும் நாங்கள்:

- மோசடி அல்லது பிழை போன்றவற்றின் காரணமாக நிதி அறிக்கைகளில் செய்யப்படும் பொருண்மை கொண்ட பிறழ்கூற்றினால் ஏற்படும் ஆபத்தை மதிப்பிடுகிறோம். அந்த இடருக்கு எதிரான தணிக்கைச் செயல்முறைகளை வடிவமைத்து நிறைவேற்றுகிறோம். எங்கள் கருத்திற்கு அடிப்படையை அளிக்கப் போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கைச் சான்றைப் பெற்றோம் பிழை காரணமாக ஏற்படும் தவறினைக் கண்டறியாமல் விடுவதைவிட மோசடி காரணமாக ஏற்படும் பொருண்மை கொண்ட பிறழ்கூற்றைக் கண்டறியாமல் விடுவதால் ஏற்படும் அபாயம் அதிகம். ஏனெனில், மோசடியில், கூட்டுச் சதி, பொய்ப்புனைவு, வேண்டுமென்றே ஒதுக்குவது, திரித்துக் கூறுவது அல்லது அகக் கட்டுப்பாடுகளை மீறுவது ஆகியவை இருக்கும்.
- வங்கியின் அகக் கட்டுப்பாடுகளின் செயல்திறன் பற்றிய கருத்தைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாது, சூழலுக்குப் பொருத்தமான தணிக்கைச் செயல்முறைகளை வடிவமைக்கும் நோக்கில் தணிக்கை சம்பந்தமான அகக் கட்டுப்பாடுகளைப் பற்றிய புரிதலைப் பெறுவது.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தல்.
- தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலான கணக்கியலைப் பயன்படுத்தும் நிர்வாகத்தின் பொருத்தப்பாடு மற்றும் பெறப்பட்ட தணிக்கை முடிவுகளின் அடிப்படையில், வங்கியின் தொடர்ந்து இயங்கும் திறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை உண்டாக்கும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருட்படுத்தக் கூடிய அளவில் நிச்சயமற்ற தன்மை இருக்கிறதா எனவும் முடிவு செய்தல். பொருட்படுத்தக் கூடிய அளவில் நிச்சயமற்ற தன்மை இருக்கிறது என்று நாங்கள் முடிவெடுத்தால், நிதி நிலை அறிக்கையில் உள்ள அது தொடர்பான வெளிப்பாடுகளைப் பற்றிய எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின்மீது நாங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதி வரை நாங்கள் பெற்ற தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் இருக்கின்றன. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழல்கள் ஒரு தொடர்ந்து இயங்கும் அமைப்பாகத் தொடராமல் ஒரு வங்கி தன் செயல்பாட்டை நிறுத்துவதற்குக் காரணமாகலாம்.
- வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த அளிப்பு முறை, அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பிட்டு நியாயமான அளிப்புகளைக் கொடுக்கும்வகையில் அதன் பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதி அறிக்கைகள் காட்டுகின்றனவா என மதிப்பிடுவது.
- நிதி அறிக்கைகள் குறித்த கருத்தை வெளிப்படுத்த வங்கியின் நிதித் தகவல்கள் குறித்துப் போதுமான பொருத்தமுள்ள தணிக்கைச் சான்றுகளைப் பெறுதல். தணிக்கையின் போக்கு, மேற்பார்வை மற்றும் செயல்திறனுக்கு நாங்கள் பொறுப்பு. எங்கள் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பு.

மற்ற விஷயங்களோடு, தணிக்கையின் திட்டமிட்ட வரம்பு மற்றும் காலம் மற்றும் எங்கள் தணிக்கையின்போது நாங்கள் இனம் கண்டறியும் அகக் கட்டுப்பாடுகளில் உள்ள எந்த ஒரு குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட குறிப்பிடத்தக்க தணிக்கைக் கண்டுபிடிப்புகளையும் இயக்குநர்களிடம் நாங்கள் தெரிவிக்கிறோம்.

சுதந்திரம் தொடர்புடைய நெறிமுறைத் தேவைகளுக்கு நாங்கள் இணங்கியுள்ளோம் என்ற அறிக்கையையும் இயக்குனர்களுக்கு வழங்குகிறோம், மேலும் எமது சுதந்திரத்தைத் தாங்கியிருப்பதாகக் கருதக்கூடிய அனைத்து உறவுகளையும் பிற விஷயங்களையும் மற்றும் பொருந்துமெனில் தொடர்புடைய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அவர்களுடன் தொடர்புகொள்கிறோம்.

### இதரச் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைப் பற்றிய அறிக்கை

எங்கள் கருத்தின்படி, வங்கி வைத்திருக்க வேண்டிய சட்டப்படி தேவையான கணக்கு மற்றும் பிறப் பதிவேடுகள் சட்ட விதிகளின்படி சரியான முறையில் வைக்கப்பட்டுள்ளன.

**எர்ன்ஸ்ட் & யங் எல்.எல்.பி.**

*பொதுக் கணக்கர்கள் மற்றும்*
*பட்டயக் கணக்காளர்கள்*

**சிங்கப்பூர்**
17 மார்ச் 2026